**செ.வெ.எண்: 47** **நாள்: 16.03.2017**

பத்திரிகை செய்தி

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், நெடுங்குடி கிராமத்தில் உள்ள கணபதி அரிசி ஆலையில் ரேசன் அரிசி பதுக்கி வைக்கப்பட்டுள்ளது என்று வருவாய்த்துறைக்கு வரப்பெற்ற ரகசிய தகவல் அடிப்படையில் **மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் உத்த**ரவின்படி இன்று (16.03.2017) பூட்டப்பட்டிருந்த கணபதி ரைஸ் மில் கதவையை உடைத்து சோதனை செய்யப்பட்டது. இச்சோதனையில் கணபதி ரைஸ் மில்லில் பதிக்கி வைக்கப்பட்டிருந்த 1280 கிலோ (32 மூட்டை) ரேசன் அரிசி பறிமுதல் செய்யப்பட்டது. இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட ரேசன் அரிசி திருமயம் தமிழ்நாடு நுகா்பொருள் வாணிபக்கழக கிடங்கிற்கு எடுத்துச்செல்லப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வில் மாவட்ட வழங்கல் அலுவலா் திருமதி.பஞ்சவா்ணம், தனி வட்டாட்சியா் (பறக்கும் படை) திரு.நாகராஜன், திருமயம் வட்டாட்சியா் திரு.கபிரியேல்சாா்லஸ் மற்றும் அரசு அலுவலா்கள் உள்ளிட்ட பலா் உடனிருந்தனா்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடா்பு அலுவலா், புதுக்கோட்டை.**